எல்லோருக்கும் வணக்கம், நான் தருமபுரியை சார்ந்தவன் என்னுடன் பல ஊர்களிலிருந்து வந்து 20 – 30 நபர்கள் இருக்கின்றார்கள். இந்த குவாரிக்கு அனுமதி தந்தால் நாங்கள் எல்லோரும் நன்றாக வேலை செய்வோம் யாருக்கும் எந்தவிதமான இடையூறுகளும் இல்லாமல் அனைத்தையும் குவாரி நிர்வாகம் செய்கின்றனர். எங்களுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் எந்தவித பாதிப்பு இல்லாமல் பாதுகாத்துக் கொள்கிறார்கள். ஊதியம் சரியான நேரத்தில் வழங்கப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக நாங்கள் இவருடன் தான் இருக்கின்றோம் இவர் எங்களுக்கு பல சலுகைகள் செய்வதால் எங்களால் இவரைவிட்டு போக மனமில்லாமல் இருக்கிறது. இந்த குவாரிக்கு உடனடியாக அனுமதி தந்தால் நாங்கள் நன்றாக இருப்போம்.

5. <u>லோகநாதன் பாலத்துறை :</u>

நான் பாலத்துறையில் வசிக்கின்றேன் இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்குதில் எங்களுக்கு எந்தவித இடையூறுகளும் கிடையாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

6. <u>சிவசாமி, பாலத்துறை :</u>

ஐயா சிவாசாமி, பாலத்துறை கிராமம், கல்குவாரிக்கு அருகில் தான் எனது தோட்டம் உள்ளது. வெடி வெடிக்கும் போது அதிகமாக புகை வருகிறது. எங்கள்

வீடுகளில் குழந்தைகள் உள்ளார்கள். முதலில் குழந்தைகள் இல்லை. இப்போது அனைத்து வீடுகளிலும் மொத்தமாக 10 குழந்தைகள் உள்ளனர். வாகனங்கள் செல்லும் போது ஏற்படும் காற்று மாசுபாட்டின் காரணமாக குழந்தைகள் சுவாசிக்க முடியவதில்லை. எங்களுக்கு வயதாகிவிட்டது. இறந்துவிடலாம். ஆனால் குழந்தைகளின் உடல்நலன், அறிவு, நுரையீரல் பாதித்து வளர்ச்சி பாதிக்கிறது. நீங்கள் தனிநபரை பார்க்காமல் இயற்கையை பார்க்க வேண்டும் .

மாசு கட்டுப்பாடு வாரியம் என்றால் என்ன மாசு எங்கெல்லாம் கெடுகிறது என்று நீங்கள் தான் தேடி பார்க்க வேண்டும். எங்களின் வாழ்வாதாரத்தையும், விவசாயத்தையும் பாதுகாக்க வேண்டும். இதை எல்லாம் நாங்களே வந்து சொல்கின்றோம். விவசாய தொழில் செய்யும் கூலி தொழிலாளர்கள் வெடி வெடிக்கும் சமயத்தில் ஓடிச்சென்று விடுவார்கள். எங்களுக்கு கூலி தொழிலாளர்கள் தான் பிரச்சனை யாருமே வருவதில்லை. ஏதாவது 1 அல்லது 2 நபர்கள் வருவார்கள் அவர்களும் வருவதில்லை . அருகில் குவாரி உள்ளதால் நாங்கள் தோட்டத்து வேலை வரமாட்டோம் குவாரியில் தினசரி வேலை கிடைப்பதால் நாங்கள் அங்கு செல்கின்றோம் என்கிறார்கள் இதனால் எங்களுக்கு விவசாயம் மற்றும் நாட்டின் உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது .

நான் வாழை பயிரிட்டுள்ளேன் வாழையில் தூசிபடிவதாலும், வாழை தார்கள் தரமனதாக இருந்தாலும், இந்த தூசியினால் ஒரு கிலோ ஒன்றிக்கு ரூ.10 குறைவாக தான் கிடைக்கிறது. மேலும் புற்களில் தூசிபடிவதால் அதை உண்ணும்

கால்நடைகளின் நலன் பாதிக்கப்படுகிறது, நாங்கள் எங்கேயாவது உடனடியாக செல்ல வேண்டும் என்றால், நேரம் காலம் பராமல் சொல்வோம் அந்த சமயத்தில் வெடி வைத்து விட்டு கொடியை காண்பித்து நிறுத்திவிடுவார்கள்.

எனது தோட்டத்திற்கு அருகில் எனது மாமன், மச்சான் வீடுகள் உள்ளது. அங்கு செல்ல தோட்டத்திற்குள் தான் சொல்வோம் அந்த சமயத்தில் தான் வெடி வைக்கிறார்கள். எனது தாத்தா காலத்திலிருந்து எந்த நேரத்திலும் எப்படி வேண்டுமென்றாலும் செல்வோம். ஆனால் இப்போது போக முடிவதில்லை இதனால் எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கின்றது. ஒன்றை பெற்று ஒளிமயமாக வாழ் என்று கூறுகிநார்கள். நிறைய பிள்ளைகளை பெற்றால் விவசாயம் செய்ய ஆட்கள் கிடைக்கும். இரண்டு குழந்தைகள் என்றாலும் ஆரோக்கியமாக வளர வேண்டும் அதை நீங்கள் மனதில் வைத்து கொள்ள வேண்டும்.

குவாரியின் உரிமையாளர் எங்களுக்கு எதிரிகிடையாது அவர்கள் எங்களின் உறவினர்கள் தான். நாங்கள் நாட்டின் நலனும், எங்களின் நலனும் வைத்துதான் இதை எல்லாம் பேசுகிறோம். குவாரிக்கு அனுமதி வழங்காமல் இருந்தால் விவசாயம் நன்றாக இருக்கும். நன்றி , வணக்கம்

7. <u>முருகாணந்தம் பாலத்துறை :</u>

இக்கூட்டத்திற்கு வந்திருக்கும் அனைத்து அதிகாரி அவர்களுக்கும் விவசாய பெருமக்களுக்கும் காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நான்

பாலத்துறை கிராமத்தில் குவாரிக்கு 300 மீட்டர் சுற்றளவில் தான் குடியிருக்கின்றோம். ஆனால் திட்ட அலுவலர் சொன்னார்கள் 300 மீட்டர் தூரத்திற்கு குடியிருப்புகள் இல்லை என்றார். எங்களுக்கு ஊருக்குள் வீடுகிடையாது. தோட்டத்தில் வீடு உள்ளது. ஆனால் குடியிருப்பு இல்லை என்று சொன்னால் நாங்கள் யாரிடம் முறையிடுவது.

அதுபோல் எனக்கு முன்னாள் பேசியது எனது தம்பி தான். எங்களின் நான்கு பேர்களின் தோட்டம் ஒன்றாக தான் உள்ளது. அனைத்து வீடுகளிலும் 2 – 4 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களால் எப்படி சுவாசிக்க முடியும். நீங்களே நேரில் வந்து களஆய்வு செய்தால் நான் உங்களை வரவேற்கின்றேன். எங்கு பார்த்தாலும் தூசிபடிந்துள்ளது. வெடி வெடிக்கும் போது கல் வீட்டின் மேல்விழுந்ததை நான் புகைப்படம் எடுத்து வைத்துள்ளேன். அதே போல பிரகாஷ் தோட்டத்திலேயும் ஓட்டின் மீது கல் விழுந்து பழுதாகி விடுகிறது. அதன் புகைப்படம் வைத்துள்ளோம்.

எனது தம்பி கூறியதைப்போல் நாங்கள் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்திற்கு செல்ல முடியாமல் கொடியை வைத்துக் தடுக்கிறார்கள். நீங்கள் மற்றவர்களின் வாழ்வாதார்ததை ஒப்பிட்டு பார்க்க வேண்டும் தற்போது விவசாயின் நிலைமை மிக மோசமாக உள்ளது. எந்த விவசாயம் செய்தாலும் நஷ்டம் தான் அடைக்கின்றோம். இந்த சின்னக்கண்ணு வாழைத் தோட்டத்து கவுண்டர் எங்கள் உறவினர்கள் தான். அவர்கள் விவசாயத்தைவிட குவாரி தொழில் தான் அதிகளவில் நம்பியிருக்கிறார்கள்.

அப்படி என்றால் விவசாயின் நிலைமை என்வென்று நீங்களே பாருங்கள், தோட்டத்து வேலைக்கு ஆட்கள் வருவதில்லை. அப்படி வந்தாலும் வெடி என்ற சொன்னால் அவர்கள் வெளியே சென்றுவிடுவார்கள். தமிழக அரசு 100 நாட்கள் வேலை என்று சொல்லி ஆட்கள் முழுவதும் குறைந்துவிட்டது.

வெடி வெடிக்கும் சமயத்தில் நிலத்தடி நீர் பாதிக்கும் வண்ணம் 100% உள்ளது. அதை தெளிவாக சொல்வதற்கு எங்களால் முடியும். நீங்கள் ஒரு கள ஆய்வு செய்ய வேண்டும். எங்களுக்கு விவசாயம் தவிர வேறு தொழில் இருந்தால் இதை விட்டுவிடுவோம். நாங்கள் அந்த மாதிரி சூழ்நிலையில் இருக்கின்றோம். ஆகவே, நீங்கள் எந்த காரணத்தைக் கொண்டு அனுமதி வழங்க கூடாது என்பதை நான் தெளிவாக சொல்கின்றேன். குவாரிக்கு அனுமதி வழங்கினால் எங்களின் வாழ்வாதாரம் பாதித்துவிடும். இப்படியே ஒவ்வொரு விவசாயியும் போய் கொண்டு இருந்தால் விவசாயத்தின் நிலைமை என்ன ஆகும் என்பதை நன்றாக சிந்தித்து பாருங்கள்.

அனைத்து அதிகாரிகள், அரசு ஊழியர்கள், அனைத்து தரப்பு இயக்கங்களும் , அனைத்து கட்சி நண்பர்களுக்கும் என்ன செய்கிறார்கள் என்றால் விவசாயத்திற்கு நாம் முதலிடம் கொடுக்க வேண்டும். விவசாயத்திற்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும். ஆனால் என்ன முன்னுரிமை கொடுத்துள்ளீர்கள் என்பது எங்களுக்கு தெரியாது. நீங்கள் வேலை வாங்கி தருவதாக சொன்னீர்கள். ஆனால் எங்கள்

வேலைக்கு யார் வருவார்கள், விவசாயம் இப்படியே சென்றால் யார் விவசாயம் செய்வது. நீங்களே ஒரு நடுநிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள் ஐயா

நாங்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் அதிகாரி அவர்களுக்கும் எங்களின் பணிவான வேண்டுகோளை வைக்கின்றோம். இந்த குவாரிக்கு அனுமதி வழங்குவதில் நாங்கள் மிக மிக கடுமையாக ஆட்சேபனை செய்கின்றோம். எந்த காரணம் கொண்டு அனுமதி வழங்க கூடாது என்பது எங்களின் தாழ்மையான கருத்து. தற்போது விவசாயிகள் உயிரோடு செத்துக் கொண்டிருக்கின்றோம். உயிர் இருந்தும் நடைபிணமாக தான் உள்ளோம் ஐயா.

ஏதாவது ஒரு விவசாய பொருளுக்கு விலை உள்ளதா? உங்களுக்கு எல்லாமே தெரியும் அல்லவா, நீங்களே நேரடியாக கள ஆய்வுக்கு வாங்க எங்களின் பாதிப்பு என்ன என்பதை உங்களுக்கு தெளிவாக காண்பிக்க தயராக உள்ளோம். எந்தந்த வகையில் விவசாயிகள் பாதிக்கின்றோம் என்பதை, மீண்டும் எங்களின் தாழ்மையான வேண்டுகோள். எந்த காரணம் கொண்டு நீங்கள் அனுமதி வழங்க கூடாது என வலியுறுத்தி தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி, வணக்கம்.

8. <u>பிரகாஷ் பாலத்துறை :</u>

ஐயா வணக்கம் நான் பாலத்துறை கிராமத்தை சார்ந்தவன். இந்த குவாரிக்கு வடபுறத்தில் உள்ள க.ச.எண். 35 –49–1ஏ வீடும், கிணறு மற்றும் அதை சுற்றி தென்னை , வாழைமரங்கள் பயிரிட்டுள்ளோம். இதற்கு முன்னாள் 21ம் சென்சுரி

என்ற பெயரில் ஒரு நிறுவனம் நடத்தி வந்தது. அப்போது எங்கள் வீட்டின் மேல் கல்விழுந்து , அது எங்களை பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியது. எங்கள் குழந்தைகள் மற்றும் பெரியோர்கள் எல்லோரும் அந்த வீட்டில் இருக்க முடியாது. என்னுடைய பட்டா நிலத்தில் நான் இருப்பதற்கு யாரிடம் நான் அனுமதி வாங்க வேண்டும். நான் ஏன் இருக்க கூடாதா என்னுடைய பூமியில் , நான் விவசாயம் செய்து கொண்டு தான் உள்ளோம், எனக்கு விவசாயத்தை தவிர வேறு எந்த தொழிலும் தெரியாது. அப்படி நான் விவசாயம் செய்கின்றபோது என்னுடைய பிரச்சனையை யாரும் கேட்பதில்லை.

நான் மாவட்ட ஆட்சியரிடம் பலமுறை மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை, பின்னர் அந்த குவாரியின் உரிமம் ரத்து செய்யப்பட்டது. அதற்கு பிறகு மீண்டும் அனுமதி கேட்கிறார்கள். இவர்களுக்கு மட்டுமின்றி வேறு யாருக்கும் அனுமதி வழங்கினால், எங்களுக்கு விவசாயம் செய்பவர்களுக்கு இடையுறுதான் ஐயா. குவாரியை சுற்றியுள்ளவர்களுக்கு பாதிப்பு தான்.

நான் விவசாயத்தை மட்டும் தான் நம்பி உள்ளோம், கல்குவாரியோ, நாங்கள் மண்எடுத்தோ சம்பாதிப்பது இல்லை. நாங்கள் விவசாய கூலி தொழில் செய்து கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தினால் நாங்கள் எப்படி இந்த இடத்தில் இருந்து விவசாயம் செய்வது என்பதை நீங்கள் தான் சொல்ல வேண்டும். ஐயா, நாங்கள்ஆடு, மாடு போன்ற கால்நடைகளை வைத்து தான் பிழைத்துக் கொண்டிருக்கின்றோம். அதே மிகவும் சிரமத்தில் உள்ளோம் இந்த பாலத்துறை

கிராமம் கலைஞர் திட்டம் என்று ஒன்று கொண்டு வந்து அதை பயன்படுத்தி கொண்டுள்ளார்கள்.

அப்போது மறுபடியும் இப்படி ஒரு பிரச்சனை வந்தால் நாங்கள் எப்படி குடியிருந்து விவசாய தொழில் செய்வது என்று நீங்களே எங்களுக்கு கருத்து தெரிவிக்க வேண்டும். இந்த குவாரிக்கு மீண்டும் அனுமதி வழங்ககூடாது என கடுமையாக தெரிவிக்கின்றோம்.

9. <u>முனுசாமி, பாலத்துறை :</u>

ஐயா வணக்கம் நான் பாலத்துறையில் வசிக்கின்றேன். தற்போது குவாரியிலிருந்து 200 மீ தூரத்தில் குக்கூ பார்ம் சைட் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. DTCP அனுமதி பெற்ற 66 சைட்டில் நான் ஒரு சைட் வாங்கி உள்ளேன். அதில் முதியோர் இல்லம் ஒன்று கட்டி வருகின்றேன் . தற்போது அந்த கட்டிடம் முடியும் தருவாயில் உள்ளது. முனியப்பன் சார் சொன்னார் கிரசர் மட்டும்தான் உள்ளதுஎன்று 200 மீட்டர் தூரத்தில் பெரிய கட்டிடம் உள்ளது. அப்படி இருக்கையில் முதியோர்களை, நாங்கள் அங்கு தங்கவைக்கப்போகிறோம். வெடி வெடித்தால் அவர்களால் இருக்கமுடியாது. இந்த குவாரியை சுற்றியும் தென்னை, வாழைமரங்கள் எல்லாம் பயிரிடப்பட்டுள்ளது. அனைத்தும் அழிந்துவிடும் இதனால் கண்டிப்பாக எதிர்ப்பு தெரிவிக்கலாம் இதற்கு நீங்கள் தான் ஒரு முடிவு சொல்ல வேண்டும். நன்றி. வணக்கம்

10. <u>டாக்டர். சாலமன் விக்ரம் :</u>

இங்கு வந்திருக்கும் எல்லோருக்கும் வணக்கம், நான் டாக்டர் சாலமன் விக்ரம் நான் குக்கூ பார்மில் உள்ள சைட்டில் வசித்து வருகின்றேன். முதலில் திட்ட ஆலோசகர் வழங்கிய திட்டத்தின் குறிப்பு மிக நன்றாக இருந்தது. உங்களின் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா ?

உங்களின் பதவி என்ன ? நீங்கள் வழங்கிய திட்டத்தின் குறிப்பு எனக்கு ரொம்ப பிடித்துருந்தது. ஆனால் ஒரு விஷயம் நீங்கள் எப்படி இதை ஆய்வு செய்தீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா ? செயற்கை கோள் அல்லது கூகிள் விவரங்கள் மூலம் பார்த்து அல்லது நேரில் சென்று ஆய்வு செய்தீர்களா ?

<u>திட்ட ஆலோசகர்</u> – அந்த இடத்திற்கு நேரில் சென்று கள ஆய்வு செய்து தான் இந்த குறிப்பை நாங்கள் தயார் செய்துள்ளோம், அனைத்துமே சுரங்க திட்ட அனுமதி பெற்று அதன்பின்னர் டார் (ToR) விளக்கங்களை வழங்கி அனுமதி பெற்ற பிறகு தான் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படுகிறது.

<u>டாக்டர்</u> – இது ஒரு விஷயம் என்றால் வேறு சிலர் வேலை கிடைக்கும் என்று சொன்னீர்கள் சார். உங்களுக்கு நான் சொல்கிறேன். இந்த குவாரியினால் மட்டுமே வேலை கிடைக்கும் என்று அல்ல. பல இடங்களில் மற்றும் உங்களுக்கு ஏற்ற வேலை இங்கேயே உள்ளது. அந்த விவரங்களுக்கு தேவைப்பட்டால் நான் சொல்கிறேன்.

ஆகையால் வேலைவாய்ப்பு என்று ஒன்றை மட்டுமே நம்பி இந்த குவாரிக்கு அனுமதி வழங்கசுடாது. விதிமுறைகள் எல்லாம் நல்லா இருக்கும் . ஆனால் அது எல்லாம் பின்பற்றுவது எப்படி என்று தெரியவில்லை. குவாரியில் வெடி வெடிக்கும் போது ஒலி மாசுபாடு அடைகிறது. வாகனங்களில் எப்படி மூடப்பட்டு செல்ல வேண்டும் . குவாரி இருக்கும் இடத்தில் எல்லாம் இது தான் நடத்து கொண்டு இருக்கிறது என்று தெரியாது எனக்கு சந்தேகமாக உள்ளது. இல்லை என்பது என்னுடைய கருத்து. நான் கண்ணால் பார்த்துள்ளேன்.

மற்றொரு விஷயம் தற்போது நமது பகுதியில் சாலை அமைக்கப்பட்டுள்ளது அல்லவா? அழகாக உள்ளது. அந்த சாலையில் வேகதடை என்று நிலையான வேகத்தடை மற்றும் தரமற்ற வேகத்தடை என்று இரண்டு உள்ளது. தரமற்ற வேகத்தடை, நிலையான வேகத்தடை என்றால் இருசக்கர வாகனத்தில் வேகமாக வேகத்தடையை கடக்கும் போது தூக்கி வீசப்பட்டு நிலை தடுமாறி கீழே விழுந்து விடுவார்கள். நிலையான வேகத்தடை என்றால் இருசக்கர வாகனத்தில் வேகமாக வேகத்தடையை கடக்கும் போது மெதுவாக சென்று நின்றுவிட்டும். ஆனால் இங்கு புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளிலும் நிலையான வேகத்தடை போடக்கிடையாது. இந்த பகுதியில் குவாரி அமைந்தால் நல்லதா? கெட்டதா? என்று சொல்லவில்லை ஆனால் பல இடங்களில் அது இல்லை நடைமுறையிலும் கொண்டுவருதில்லை. நேரடியாக உதரணங்கள் சொல்ல வேண்டுமென்றால். முருகநாதன் ஐயா சென்னார் குவாரிக்கு எவ்வளவு அருகில் இருக்கிறோம் என்று சொன்னார். முனுசாமி

சொன்னார் முதியோர் இல்லம் நடத்த அனுமதி வாங்கி இங்கே கட்டிடம் கட்டப்பட்டு தற்போது முடியும் தருவாயில் உள்ளது. அங்கு அந்த மாதிரி ஆட்கள் வரப்போகிறார்கள். முதியோர் இல்லங்களுக்கு அருகில் ஒலி மற்றும் காற்று மாசுபாடு இருக்க கூடாது. எதற்காக முதியோர் இல்லங்களுக்கு வருகிறார்கள் என்று எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். அந்த இடத்தில் இந்த மாதரி ஒரு விஷயம் வந்தால் அவாகள் எப்படி பாதிக்கப்படுவார்கள் என்பது தெரியும்.

முதியோர் இல்லம் மட்டுமல்ல பல முதியோர்கள் இந்த பகுதியில் உள்ளார்கள். இந்த குவாரியினால் வரக்கூடிய பிரச்சனை என்வென்று உங்கள் எல்லோருக்கும் தெரியும், தெரியாவிட்டாலும் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த இடத்தில் வபதானவர்கள் இருக்க வாய்ப்பு மிக குறைவு ஏன் என்றால் அவர்கள் இளமையிலே சென்று விடுவார்கள். அந்த மாதிரி பாதிப்புகள் அதிகமாக இருக்கிறது.

அடுத்து நீர்மாசுபாடு அது என்வென்றால் நிலத்தடி நீர் பாதிப்பு அடையும் என்பது உங்களுக்கு தெரிந்த ஒன்றுதான். இங்கு இருப்பவர்கள் பலர் விவசாயிகள் தான். அந்த பாதிப்பை எதிர் கொண்டு வருகிறார்கள். மற்றொரு விஷயம் என்வென்றால் காட்டு விலங்குகள் என்று சென்னீர்கள். பாவம் மனிதர்களே வந்து விட்டார்கள். காட்டு விலங்குகள் வர வாய்ப்பு இல்லை இவர்களிடமே நாம் கேட்டுக் கொள்வோம். காட்டு விலங்குகள் எத்தனை பேர் இங்கு பார்கிறீர்கள். காட்டுப்பன்றி, மயில், மான் வர வாய்ப்பு உள்ளதா? முயல் வர வாய்ப்பு உள்ளதா? நரி , காட்டுப்பூனை

அது எல்லாமே காட்டு விலங்குகள் தான். இது எல்லாம் இங்கு இருக்கிறது. ஆனால் நீங்கள் இல்லை என்று சொன்னீர்கள். மக்கள் அதை மறுக்கிறார்கள்.

மரங்களின் மறைவில் பறவைகள் பல எத்தனையோ பறவைகள் கோவையை விட்டு, தென்னிந்தியாவை விட்டு வெளியே சென்று விட்டது. ஆனால் பறவைகளுக்கு இந்த இடம் தான் மிக அருமையான இடமாகும். இந்த விஷயங்ளை இந்த இடத்தில் பாதிப்பு ஏற்ப்பட்டால், இந்த இடங்களை விட்டு வெளியே செல்ல வாய்ப்புகள் அதிகம். இந்த மாதிரி பற்பல விஷயங்களுக்கு பாதிப்படைகிறது .

இந்த விஷயங்களை எல்லாம் ஐயா எடுத்துள்ளார்கள். ஆனால் இது எந்த அளவிற்கு உண்மை என்பது மக்களுடைய சேர்ந்து ஆய்வு செய்ய வேண்டும் ஒரு அறிக்கை தயார் செய்த பிறகு 2வது கருத்து கேட்பு கூட்டம் நடத்தினால் நன்றாக இருக்கும்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்</u> – உங்கள் கருத்துகளை நாங்கள் பதிவு செய்து அனுப்பிவிடுவோம்.

<u>டாக்டர்</u> – அவர்களுடைய ஆய்வு அறிக்கை எல்லாம் வைத்து நான் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு ஒரு மனு அனுப்ப உள்ளேன். இத்திட்டம் குறித்த அடுத்த அறிக்கை வரும் வரை .இந்த குவாரிக்கு அனுமதி வழங்குவதை நிறுத்தி வைக்க வேண்டும்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்</u> – பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி சியாவுக்கு நாங்கள் அறிக்கை அனுப்ப வேண்டும். அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். மீண்டும் கருத்து கேட்பு கூட்டம் நடத்த வேண்டுமா என்றும் நீங்கள் சொல்கிற ஒவ்வொரு கருத்தும் வீடியோ பதிவு செய்தும், எழுத்து படிவத்தில் கொடுக்கப்படும் . எல்லாமே தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதி அவர்களிடம் அனுப்பிவிடுவோம். இதை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு மாநில சுற்றுச்சுழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தான் உள்ளது அனைத்தையும் நாங்கள் அனுப்பிவிடுவோம்.

இதில் மாசுகட்டுபட்டு வாரியம் மற்றும் வருவாய் துறை ஆகியோர் கருத்து கேட்பு கூட்டத்தை நடத்தி அதனுடைய அறிக்கையை SEIAA–விற்கு அனுப்பப்படும். நீங்கள் சொல்கிற கருத்துகள் எல்லாம் வந்துவிடும் நீங்கள் இப்போ பேசின எல்லாம் அதில் பதிவாகி இருக்கும். இந்த பதிவை பார்த்து அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். உங்கள் கருத்துக்களை நாங்கள் பதிவு செய்து கொள்கிறோம்.

<u>டாக்டர் –</u> உங்கள் பதிவிற்கு முன் ஒரு நகல் கிடைக்க வாய்ப்பு உள்ளதா?

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்</u> – இது எங்கள் இணையதளத்தில் ஒரு மாதம் பின்பு நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

<u>டாக்டர் –</u> நீங்கள் சமர்ப்பிக்கும் முன் ஒரு நகல் கிடைத்தால் நன்றாக இருக்கும்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் – நான் இங்கு என்ன பதிவு செய்கிறோமோ அதை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி அவர்கள் பதிவேற்றம் செய்வார்கள். உங்கள் தொலைபேசி எண்ணை கொடுங்கள். உங்களுக்கு நாங்கள் தகவல் தருகிறோம். பிறகு நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

டாக்டர் – உங்கள் தொலைபேசி எண்ணை பறிமாறிக் கொள்ளலாம். எந்த பிரச்சனையும் இல்லை. மேலும் சில விஷயங்களை சொல்ல விரும்புகிறேன் அதை சொல்லாமா ?

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் – உங்கள் கருத்து எத்தனை வேண்டுமனாலும் சொல்லாம் அதில் ஒரு பிரச்சனையும் கிடையாது. கருத்துக்கள் கேட்பு கூட்டம்தான் இது குறை தீர்ப்பு கூட்டம் கிடையாது அதை தெளிவாக சொல்கிறேன்.

11. முருகானந்தம் பாலத்துறை :

இந்த கருத்து கேட்பு கூட்டம் நீங்கள் வாய் மொழியாக சொன்னீர்கள். அதே சமயத்தில் நாங்கள் விவசாயிகள் அனைவரும் மனு கொண்டுவந்துள்ளோம். இந்த மனுக்களை பெற்றுக் கொண்டு ஒப்புகை கையொப்பம் போட்டு தர வேண்டும். இரண்டு நகல்கள் நாங்கள் கொண்டு வந்துள்ளோம். மனுவை பெற்றுக் கொள்ளப்பட்டது என்று ஒப்புகை கையொப்பம் போட்டுத்தாருங்கள். நாளைக்கு வந்த உங்களிடம் கேட்ட முடியாது

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்</u> – அதாவது நீங்கள் மனு கொடுக்கீர்கள் அதை அப்படியே இதில் இணைத்து இணையதளத்தில் பதிவு செய்திடுவோம் . உங்கள் மனு அந்த பதிவில் இருக்கும். நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை, மனுவில் ஒப்புகை கையொப்பம் போட்டுத்தருகின்றோம்

<u>முருகானந்தம்</u> – நீங்கள் அதிகாரிகள் நாளை வேறு பணி மாறுதலாகி சென்று விட்டாலும் கூட நாங்கள் அடுத்த அதிகாரிகளுக்கு காட்ட ஏதுவாக இருக்கும் ஐயா சொன்னார்கள் 300 மீட்டர் தூரத்தில் குடியிருப்பு பகுதிகள் எல்லாம் இல்லை என்று. நாங்கள் தோட்டத்து சாலையில் தான் குடியிருக்கின்றோம் அதற்கு உண்டான ஆவணங்கள் வைத்து தான் கொடுக்கிறோம்

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்</u> – மனுவை கொடுங்கள் எங்களுக்கு எந்தவித பிரச்சனையும் கிடையாது

12. <u>இளங்கோ, பாலத்துறை :</u>

நான் குக்கூ பார்ம் ,பாலத்துறையில் வசிக்கின்றேன். இக்கூட்டத்தின் முதலில் திட்டத்தை விளக்கியவர் சொன்னார் 300 மீட்டர் சுற்றளவில் எந்த வீடுகளும் இல்லை என்று சொன்னார்கள். இதில் மொத்தம் 66 சைட்கள் DTCP அனுமதி 207–2017 , அதில் 4 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே 2 கி.மீ தொலைவில் வெடிக்கிற வெடியினால் நில அதிர்வுகள் தாங்க முடிவதில்லை. புளுதியும் அதிகமாக வருகிறது. ஆழ்குழாய் கிணறு, கிணறு அமைத்துள்ளோம்.

கல் குவாரியில் 46 மீட்டர் அளவு எடுப்போம் என்று சொன்னார்கள். அப்படி என்றால் கிட்டதட்ட 140 அடியாகும். இங்கு தண்ணீர் இருப்பது 40 அடி உயரத்தில் நீர் உள்ளது. அப்படி என்றால் 140 அடிக்கு போகுமா 40 அடிக்கு தண்ணீர் போகுமா இங்கு இருக்கும் தண்ணீர் எல்லாம் அங்கு சென்று விடும். நீர்நிலைகள் வறண்டு விடும் விவசாயம் பண்ணமுடியாது, குடியிருப்பு இருக்க முடியாது. DTCP அனுமதி பெற்ற 60 சைட்கள் இருக்கிறது. அதில் 4 வீடுகள் உள்ளது. தற்போது நாங்கள் கடன் வாங்கி வீடு கட்டி வருகின்றோம். இந்த நிலைமையில் நாங்கள் எங்கு செல்வது. நாங்கள் எல்லோரும் வறுமையில் உள்ளோம். இதற்கான பதில்., கருத்து கேட்பு கூட்டம் நாங்கள் எந்தவிதமான தொழிலையும் எதிர்க்க வில்லை அனைவருக்கும் தொழில் தேவைதான் , நாங்கள் யாரையும் எதிர்க்கவில்லை . எங்களை பாதிக்கிற மாதிரி சூழ்நிலையை தயவு செய்து உருவாக்க வேண்டாம். எங்கே சென்று முறையிடுவது. மேலே வானத்தை பார்த்து கத்தி கொண்டு தான் இருக்க வேண்டியதுதான்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்</u> – தவறாக பேசவேண்டாம், செல்வதை கேளுங்கள். உங்களுக்கு நான் தெளிவான பதில் செல்கிறேன். நீங்கள் ஆட்சேபனை கொடுங்கள். எதுவாக இருந்தாலும் தவறுகள் மற்றும் குறைகளை சொல்லுங்கள் அதை கேட்பதற்காக தான் நாங்கள் இங்கு வந்துள்ளோம். பொறுமையாக பேசுங்கள்.

<u>இளங்கோ</u>– பொறுமையாக தான் சொல்கின்றேன். தார் ஆலை அருகில் போட்டார்கள், ஒரு வருடத்திற்கு கால ஒப்பந்தம் என்று சொல்லி நடத்ினார்கள். நல்ல வேளை எடுத்துவிட்டார்கள். அந்த ஒரு வருடத்தில் அந்த பகுதியில் குடியிருந்தவார்கள், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் என்று எல்லோருக்கும் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டனர். இதில் குழந்தைகள் எல்லோரும் வெளியில் சென்று விட்டனர். பலருக்கு ஆஸ்துமா நோய் வந்தது. வெளியில் சென்று விட்டனர். அந்த ஒரு வருட காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்டோம். அதன் தார் ஆலை உரிமையாளரிடம் பலமுறை முறையிட்டோம். ஒன்றுமே செய்ய முடியவில்லை எங்கு பார்த்தாலும் தூசி இதனால் இரத்த கண்ணீர் வடித்தோம்.

ஏன் என்றால் இருக்கிற பணத்தை எல்லாம் வைத்து நிலத்தை வாங்கி வீடு கட்டிக் கொண்டிருக்கிறோம். என்ன பண்ண முடியும். ஒரு வருட காலம் முடிந்தாவுடன் அவர்கள் அதை எடுத்துவிட்டார்கள். நல்ல வேளை தார் ஆலை அகற்றப்பட்டது என்று நிம்மதியாக இருந்தோம். அதற்குள் இந்த ஒரு கருத்து கேட்பு கூட்டம் நடக்கிறது. இப்படி இருந்தால் நாங்கள் என்ன பண்ணமுடியும். அவர்களை எதிர்கின்ற எண்ணம் எல்லாம் கிடையாது. அவர்கள் யார் என்றே தெரியாது . நாங்கள் DTCP அனுமதி பெற்ற சைட்டில் குடியிருக்கலாம் என்று நிலத்தை வாங்கி வீடு கட்டியிருக்கின்றோம். இந்த மாதிரி நிலைமை வந்தால் வீட்டில் சுவர்களில் விரிசல் ஏற்படும், என்னென்ன மாசுபாடு ஏற்படுகிறதோ அதுஎல்லாம் வரும். இந்த கருத்தை எப்படி பதிவு செய்வது , கருத்து கேட்பு கூட்டம் நடத்துகிறார்கள் இது எந்த விதத்தில்

நடவடிக்கை எடுக்க முடியும் என்று தெரியவில்லை. சாதாரண அடிப்படை மக்கள் என்னுடைய கருத்தை முடித்துவிட்டேன் பதிவு செய்து கொள்ளுங்கள். நன்றி வணக்கம்

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் – உங்கள் கருத்து அனைத்தும் கண்டிப்பாக பதிவாகி உள்ளது. இந்த விடியோ பதிவு செய்யப்பட்டுள்ளது.

இளங்கோ– தொழில் இல்லை என்ற காரணம் எல்லாம் எங்களுக்கு புரிகிறது. நாங்கள் அரசாங்க ஊழியர் கிடையாது. நாங்களும் சாதாரணமாக பட்டறை தொழில் (மெக்கானிக்)தான் செய்கின்றோம். எங்கள் குடும்பம் ஏழ்மையான குடும்பம் தான். விவசாய தொழில் செய்கிறோம். எல்லா விதமான தொழில்களும் வளர வேண்டும் யாருக்கும் யாரும் எதிரி கிடையாது. குவாரியில் உரிமையாளரும் எதிர்ப்பு கிடையாது. தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள், வேலை செய்பவர்களுக்கும் நாங்கள் எதிரிகிடையாது. வண்டி, டிராக்டர் ஓட்டுபவர்களுக்கும் , ஆடு மாடு மேய்பவர்கள் எல்லோருமே இருக்கலாம். யாரையும் எதிர்க்க வில்லை என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள் மனசார எல்லா மக்களும் நன்றாக இருக்க வேண்டும் எல்லா உயிர்களும் நன்றாக இருக்க வேண்டும். பகுத்துண்டு பல்லுயிர் ஓங்குதல் என்று சொன்னார்கள் எல்லா உயிர்களுக்கும் நன்றாக இருக்க வேண்டும் என்பதை முதலில் பதிவு செய்து கொள்கிறறேன். நன்றி. வணக்கம்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் – மனு கொடுப்பவர்கள் வந்து மனு கொடுங்கள்

13. <u>சண்முகசுந்தரம், பாலத்துறை,</u>

நான் பாலத்துறையில் நாச்சிமுத்துகவுண்டர் தோட்டத்தில் வசிக்கின்றேன், ஏற்கனவே அண்ணன், தம்பி பேசினார்கள். நானும் சங்கத்தில் உள்ளேன். ஆரம்பத்தில் பேசினவர் முற்றிலும் உண்மைக்குப் புறம்பாகவே தான் பேசினார். 300மீட்டர் சுற்றளவில் ஒன்றும் இல்லை என்றும், அவர் களத்திற்கே வராமல் அனைத்தையும் ஒழுங்கு படுத்தியுள்ளார். குவாரி சுற்றி எல்லாம் உள்ளது. ஏற்கனவே, எங்கள் பக்கத்து தோட்டத்தில் செந்தில் கிரசர் உள்ளது. வெடி வெடித்தால் 15-20 நிமிடம் வரை சுவாசிக்க முடியாது. திருமலையாம்பாளையம் கிராமத்தில் உள்ள எங்கள் தோட்டம் மற்றும் பக்கத்து தோட்டம் ஆகியவை வெடி வெடித்தால் அதிகமாக புழுதி வந்து முடிவிடும்.

1500 மரங்கள் நடுவோம் என்று சொன்னார்கள் , கல்குவாரியில் தண்ணீர் ஊற்றி வெடி வைக்கின்றோம் என்று சொன்னார்கள். என்னை அழைத்து சென்று காண்பிக்க வேண்டும். இது எல்லாம் இருக்கிறதா என்று காண்பித்தால் பரவாயில்லை. பாலத்துறை – திருமலையாம்பாளையம் சாலையில் அந்த இரட்டை புளியமரத்திற்கு அருகில் பலமுறை வெடி வைத்திருக்கின்றோம் என்று கொடி காண்பித்துள்ளார்கள். நானும் நின்றுதான் சென்றுள்ளேன். யார் இந்த குவாரிக்கு அனுமதி கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. 10 நிமிடம் நில்லுங்கள் அண்ணா வெடி வைக்கிறோம் என்று சொல்கிறார்கள். நீங்கள் எதற்காக வெடி வைக்கிறீர்கள்

என்று கேட்டால் கல் விழும் என்கிறார்கள். இதற்கு யார் அனுமதி வழங்கியது என்று தெரியவில்லை.

இயற்கை கொடுக்கிறது, நாங்கள் குழந்தைகளுடன் எப்படி வாழ்வது நீங்களே நேரில் வந்து களஆய்வு செய்து பிறது தான் ஒரு முடிவு சொல்ல வேண்டும் ஐயா. ஆரம்பத்தில் பேசியவர் எதுவுமே உண்மை கிடையாது. அவர்களை நேரில் வரச் சொல்லுங்கள் எங்கே 1500 மரங்கள் நட்டிருக்கிறார்கள் எங்கு வெடி வெடிக்கு போது தண்ணீர் தெளிக்கப்படுகிறது. கண்டிப்பாக இவர் வந்து காண்பிக்கவேண்டும். சாலைகளில் முழுவதும் தண்ணீர் ஊற்றப்படுகிறதா என்று வந்து காண்பிக்க வேண்டும்.

ஒரு ஆள் அழித்து அதில் 1000 நபர்கள் வாழ்வார்கள் என்றால் அதற்கு நாங்கள் அனுமதி அளிக்கமாட்டோம். நிறைய நபர்கள் பேசினார்கள் 50 –100 குடும்பங்கள் மேம்படுகிறது என்று,10 பேரை அழித்து 1000 வாழ்கின்றார்கள் என்றால் அந்த தொழில் தேவையே இல்லை. எங்கள் தோட்டத்தில் ஏற்கனவே இரண்டு கல்குவாரிகள் இருக்கிறது. நாங்கள் போராட்டத்தில் தான் விவசாய தொழில் செய்து கொண்டிருக்கின்றோம். இந்த குவாரிக்கு அனுமதி வழங்கினால் நாங்கள் இருக்கவே முடியாது. நீங்கள் ஏதோ ஒருவிலையை போட்டு வைத்துக்கொள்ளுங்கள் நாங்கள் எல்லோரும் வெளியே செல்கிறோம் இதை தவிர வேறு பதில் என்னிடம் இல்லைங்க சார் நன்றி. வணக்கம்.

14. <u>மஞ்சுளா, பாலத்துறை :</u>

நான் துளசியம்மாள் மகள் இந்த குவாரி முதலில் 21ம் சென்சுரி என்ற பெயரில் இருந்தது. இப்பொழுது நாங்கள் இப்போது தான் புதியதாக வாங்கி நடத்தப்போகிறோம். இந்த குவாரியில் செயல்முறை எல்லா வேலைகளும் எங்களுக்கு தெரிந்த விதிமுறைப்படி தான் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். எல்லாமே சரியான முறையில், பாதுகாப்பானமுறையில் , பசுமை வளையம் ஏற்படுத்துதல் மற்றும் கம்பி வேலி போடுவது போன்ற அனைத்துமே சிறப்பான முறையில் தான் செய்யப்பட்டிருக்கின்றோம். எங்களால் முடிந்த அளவிற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ சரியாக தான் செய்திருக்கிறோம். இந்த குவாரிக்கு அனுமதி வழங்கினால் விதிமுறைப்படி என்ன என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யலாம். முன்னதாக தகவல் கொடுத்து வெடி வெடிக்க செய்ய வேண்டும் தற்போது நவீனமயமாக பல தொழில்நுட்பம் வந்துள்ளது. சத்தமே இல்லாமல் வெடி வைப்பது. அந்த மாதிரி நாங்கள் பாதுகாப்பாக நடத்தி யாருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லாமல் நடத்துவோம். நன்றி வணக்கம்.

15. <u>சண்முகசுந்தரம். பாலத்துறை :</u>

கம்பி வேலி அமைத்தால் , அதை தாண்டி கல்வராதா, புளுதி வராதா தண்ணீர் ஊற்றினால் பொது மக்களுக்கு எந்தவித பாதிப்பும் வராதா?

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் – உங்களுடைய குறைகளை சொல்லுங்கள்.

சண்முகசுந்தரம் – மேடம் சொன்னார்கள் கம்பி வேலி அமைத்து பாதுகாத்துக் கொள்கிறோம் என்று.

மாவட்ட சுற்றச்சூழல் பொறியாளர் – உங்கள் கருத்துக்களை சொல்லுங்கள் என அது வருமா வராதா என்று உத்தேசமாக பேச கூடாது உங்கள் கருத்துக்களை நீங்கள் சொல்லுங்கள் என்ன பாதிப்பு ஏற்படுகிறது என்று சொல்லுங்கள் அதை நாங்கள் பதிவு செய்து கொள்கிறோம்

இளங்கோ -- மேடம் சென்னார்கள் பாதுகாப்பான முறையில் செய்கிறோம் என்று 2 கிலோ மீட்டர் தள்ளி வெடி வெடிக்கும் போதே ஏற்படும் நில அதிர்வுகளால் கட்டிடங்கள் குலுங்குகிறது. அப்படி என்றால் இந்த 200 மீட்டர் தொலைவில் அது என்ன தான் நவீனமுறையில் செய்தாலும் கட்டிடங்கள் பாதிக்கப்படுகிறது. நான் ஏற்கனவே, சொன்ன மாதிரி கடன் வாங்கி தான் வீடு கட்டியுள்ளேன். ஆதனால் நவீன முறை அது எல்லாம் கிடையாது. ஒரு கல்லை பெயர்த்து எடுக்கும் பொழுது நில அதிர்வுகள் கண்டிப்பாக நகரும், கிலோ மீட்டர் துரத்தில் நில அதிர்வுகள் பரவுகிறது இதனால் எங்கள் கட்டிடம் விரிசல் ஏற்படும். மாசுபாடு அடையும் . அதனால் அவர்களுக்கு எந்தவிதமான எதிர்ப்புகளையும் தெரிவிக்கவில்லை நாங்கள் உங்களிடம் முறையிடுகிறோம். ஐயா. அதனால் தயவு செய்து அனுமதி வழங்க கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கூட்டத்தில் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை கூறிய பொதுமக்கள் சுற்றுச்சூழல் ஆர்வலர், சமூக செயல்பாட்டாளர்கள் ஆகியோருக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பாக திருமதி. D.பிரிசில்லா, உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது, கூட்ட நிகழ்வுகள் காணொளி மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது,

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, காணொளி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுக்களின் எண்ணிக்கை : 6

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**கோயம்புத்தூர் தெற்கு**

**தனி மாவட்ட வருவாய் அலுவலர்,**
**விமான நிலையம், நிலம் கையகப்படுத்துதல்,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**